1989 மே 4]

நான் கூடக் கேள்விப்பட்டேன். ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அவர்கள் நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டபோது நல்ல பெயரை எடுக்க வேண்டுமென்று யாரோ

(முற்பகல் 9-10)

சொன்னதாகவும், அதன் காரணமாக என்னுடைய பெயர் களையெல்லாம் அவர்கள் எடுத்து விட்டார்கள் என்று கூட நான் கேள்விப்பட்டேன். (சிரிப்பு) ஆனால், இந்த அரசு பொறுப் பேற்ற பிறகு இங்கே கூட போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிற போது—ஒரு உறுப்பினர் பேசினார்— அன்னை சத்தியா என்ற போக்குவரத்துக் கழகத்தினுடைய பெயரை மாற்ற வேண்டுமென்று.— அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அது மாற்றப்பட மாட்டாது என்று பதில் அளித்தார்கள். எனவே, பேருள்ளத்திற்கு, பெருந்தன் மைக்குச் சொந்தக்காரர்கள், உண்மையான அண்ணாவின் தம்பிகளாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தார் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த ஹெலிகாப்டரைப் பொறுத்த வரையில் இது எம்.ஜி.ஆர். வாங்கியதால் விற்கிறீர்களா என்று கேட்பது நியாய மற்ற கேள்வி. அது பழசாகி விட்ட காரணத்தால் அதை விற்கின்றோம். அதைத் தவிர வேறு எந்த விதமான உள் நோக்கமும் கிடையாது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வள்ளியாற்றின் குறுக்கே பாலம்.

191— *வினா எண். 299) திரு. ஆ. பாலையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக்குறிச்சியில் வள்ளியாற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும் பாலம் கட்டி முடிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன ?

(ஆ) பாலம் எப்போது கட்டி முடிக்கப்படும் ?

[1989 மே 4

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) இப்பாலம் மொத்தம் 45 மீட்டர் நீளம் கொண்ட 3 கண்களுடைய பாலமாகும். இதற்கு அஸ்திவாரம் போட 10 மீட்டர் ஆழத்திற்கு 16 கிணறுகள் இறக்க வேண்டும். ஆற்றில் எப்போதும் சுமார் 3 அடி ஆழத்திற்கு தண்ணீர் ஓடிக்கொண்டு இருப்பதாலும், ஒப்பந்தக்காரர் பணியினை விரைந்து செய்யாததாலும் பணி தாமதப்படுகிறது. இப்பால வேலையைத் துரிதமாக முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) 30-9-1989-க்குள் பால வேலை முழுவதுமாக முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் 1982 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. சுமார் ஒன்பது ஆண்டுகளாகியும் இந்தப் பாலம் முடிக்கப்படாமல் இருக்கிறது. அந்தப் பாலம் முடிக்கப்படாததன் காரணத்தால் அந்த வழியாகச்செல்கிற போக்குவரத்துகள் ஓடமுடியாதநிலைமை இருக்கிறது. நாகர்கோவிலுக்குச் செல்கிற அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் போய் வருவதற்கு வாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே இந்தப் பாலத்தை வேகமாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு, இந்த ஒப்பந்தக்காரர் இந்த பாலத்தைப் பிடித்ததன் மூலமாக இந்த வேலையை காலதாமதமாக்கிக் கொண்டே இருக்கிறார்கள். அதைப் போல இந்த ஒப்பந்தக்காரர் சைமன் காலனியில் ஒரு பாலத்திற்கு ஒப்பந்தம் பெற்றதையும் தொடங்காமல் காலம் கடத்திக் கொண்டிருக்கிறார். கான்ட்ராக்டருடைய காலம் கடத்தும் போக்கின் காரணத்தால் இந்தப் பாலம் முடிக்கப்படாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தப் பாலம் ஆரம்ப காலத்தில் கட்டுவதற்கு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு வினாவைத் தொடுத்து விட்டு அமர்ந்தால் மறுபடியும் இன்னொரு வினாவிற்கு வாய்ப்பு இருக்கிறது. அமைச்சருக்கும் பதில் சொல்வதற்கு வாய்ப்பு வேண்டாமா? ஒவ்வொன்றாகக் கேளுங்கள். விரைவில் இந்தப் பாலம் கட்டப்படுமா என்பது ஒரு கேள்வி.

1989 மே 4]

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1982-ல் போடப்பட்ட மதிப்பீட்டை விட 1989-ல் எவ்வளவு கூடுதலாகச் செலவாகும்? அதனால் இந்த அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்திற்கான மதிப்பீடு $27\frac{1}{2}$ லட்சம் ரூபாய். 1983 ஆம் ஆண்டு 12-வது மாதத்தில் வேலை தொடங்கப்பட்டது. சாதாரணமாக இதனுடைய வேலை தாமதப்பட்டதற்கு காரணம் அந்த ஆற்றில் எப்போதும் பெரும் பாலான நாட்களில் சுமார் மூன்று அடி அளவில் தண்ணீர் ஓடிக் கொண்டிருப்பதேயாகும். 16 கிணறுகள் அதிலே அஸ்திவாரம் போடுவதற்காகத் தோண்டப்பட வேண்டிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் கூட அந்த வேலைகள் இப்போது முடிவடைந்து விட்டன—அஸ்திவாரம் போடுகிற வேலை—பக்கத்தில் சுவர்கள் ''அபட்மெண்ட்,, கட்டப்பட்டு விட்டது. அந்த வேலையினுடைய ஒப்பந்தக்காரர் 1984 ஆம் ஆண்டிலிருந்து 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி வரையில் இரண்டு, மூன்று முறைகள் எச்சரிக்கப்பட்டு, அவர் மேலும் கால தாமதம் செய்த காரணத்தால் அவருக்கு துறையிலிருந்து ரூபாய் 7,250 வரையில் பல்வேறு நேரங்களில் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் கடுமையாக எச்சரிக்கை கொடுத்ததற்குப் பின்னால் வருகிற ஒன்பது மாதங்களுக்குள்ளாக இந்த வேலையை முடித்துத் தருகிறோம் என்ற உறுதியைச் சொல்லி இருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஆ. பாலையா : பேரவைத் தலைவர் அவர்களே இந்தப் பாலம் முடிவு அடைகிற வரையில் பக்கத்திலே இருக்கிற பழைய பாலத்தை பழுது பார்த்து போக்குவரத்திற்கு வாய்ப்பாக அமைத்துக் கொடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்திலே இருக்கக் கூடிய பழுது அடைந்த பாலத்தைப் பற்றிய விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் பேருந்து வந்து செல்வதற்கு மிகவும் தடையாக இருக்கிற நிலைமை இருக்குமானால், அது பற்றியும் நடவடிக்கை எடுக்கலாம்.